VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

**இலங்கையின் வர்த்தக சூழலை மேம்படுத்தல்: அது அவ்வளவு சிரமமானதொன்றல்ல.**

“நடைபெறும் வர்த்தக சுட்டியில் தென்னாசியாவில் முதல் 10 நாடுகளின் வரிசையில் இடம் பிடிப்பதை இலங்கை இலக்காகக் கொண்டுள்ளது” என்று நிதி அமைச்சர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார். இது அடையத்தக்க ஓர் இலக்கு என்பதை இந்த நுன்மதி எடுத்துக் காட்டுவதோடு, இந்த இலக்கை அடைவதற்கு இலங்கைக்கு உதவக்கூடிய மூன்று வகையான திருத்தல் நடவடிக்கைகளையும் வெளிப்படுத்துகிறது.

நடைபெறும் வர்த்தக சுட்டி (DBI) வர்த்தகச் சூழலின் பல்வேறு பகுதிகளையும் கவனித்து வேகம் மற்றும் நடைமுறை ரீதியாக அவற்றை மதிப்பீடு செய்கிறது. இப்பாகங்களை ஒன்று திரட்டுவதானது, வர்த்தகத்தை நடத்தும் இலகு தன்மையை அடிப்படையாகக் கொண்டு நாடுகள் தரவரிசைப் படுத்தப்படும் கூட்டுச் செயற்பாடு ஒன்றை உருவாக்குகின்றது.

இலங்கை கடந்த ஆண்டில் ஆறு ஸ்தானங்கள் முன்னேறியதோடு, தற்போது உலகில் 99வது இடத்தை வகிக்கின்றது. தென்னாசியாவில் முதலாவது இடத்தையும் அது வகிக்கின்றது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை 15 வது இடத்தில் உள்ளது. DBI யின் ஆசிய பசுபிக் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் வருதற்கு(வரவு செலவுத் திட்ட உரையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு) இலங்கை உலகத் தரவரிசையில் குறைந்தது 11 இடங்களாவது முன்னோக்கி நகர வேண்டும்.

இந்த பகுப்பாய்வு அந்த இலக்கை அடைவதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளைக் காணுவதோடு, அவற்றை ஒரு மூன்று படிநிலை கொண்ட திருத்தல் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டமாகவும் விபரிக்கின்றது: (1) ஓட்டைகளை அடைத்தல் (2) கைக்கெட்டிய பழங்களைப் பறித்தல் மற்றும் (3) மிகவும் பலவீனமான தொடர்பிற்கு முன்னுரிமையளித்தல்.

**ஓட்டைகளை அடைத்தல்**

முதல் படி தற்போதுள்ள நன்மைகளைப் பாதுகாத்தலாகும். அதாவது, சுட்டியின் பல்வேறு அம்சங்களிலும் வீழ்ச்சியைத் தடுத்து இலங்கையின் ஒட்டுமொத்த தர வரிசையைப் பேணுவதாகும். பொதுவான அபிவிருத்தி ஏற்பட்டிருந்தபோதிலும், சுட்டியின் அரைவாசி அம்சங்களில் இலங்கை வீழ்ச்சி கண்டுள்ளதென்பதை காட்சி 1 எடுத்துக்காட்டுகிறது. ஒட்டு மொத்த அபிவிருத்தியானது, எல்லாவற்றையும் உள்ளடக்கி ஒரு சிறு அபிவிருத்தி எற்பட்டதால் உண்டானதல்ல. மாறாக, ஏனைய சுட்டிகளில் சிறு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தும், சில சுட்டிகளில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டதால் உண்டானதாகும். எடுத்துக்காட்டாக, எல்லை தாண்டிய வர்த்தகத்தில் இலங்கை 16 இடங்கள் முன்னேறியது. எனினும், ஒப்பீட்டளவில் சொத்துக்களை பதிவு செய்வதில் ஏழு இடங்களால் மட்டுமே வீழ்ச்சியடைந்தது - இது அதனுடைய மிக மோசமான வீழ்ச்சியாகும்.

தரவரிசையில் தனது இடத்தைப் பேணுவதென்பது, ஒரு ஓட்டப்பந்தயத்தில் தனது நிலையை நிலை நிறுத்துவது போன்றதாகும். ஒரே இடத்தில் தொடர்ந்து நிலை கொண்டிருப்பதன் மூலம் அதனைச் செய்ய முடியாது. ஏனைய நாடுகளெல்லாம் அபிவிருத்தி அடையும் சூழ்நிலையில், இலங்கை அவற்றை விட பின்தங்கிவிடுவதைத் தவிர்ப்பதற்கு தானும் முன்னேற்றம் காண வேண்டும். எனவே, தர வரிசையில் இலங்கை வீழ்ச்சியுற்ற பகுதிகளுக்கு மேலதிகமாக, தர வரிசையில் எவ்வித மாற்றமும் ஏற்படாத பகுதிகளிலும் பாதிப்புறும் தன்மை உண்டு (காட்சி 1 ஐ பார்க்க)

பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகள் அனைத்தையும் இனங்காண்பதும் அவற்றில் முன்னேற்றங்கள் உலகின் போக்கிற்கு நிகராக இருப்பதை உறுதி செய்வதுமே முதல் படிநிலையாகும்.

**காட்சி 1: ஒட்டைகளை அடைக்தல்**

| | 2014 | 2015 | Change |
|---|---|---|---|
| நடைபெறும் வர்க்ககச் சுட்டி | 105 | 99 | ↑ 6 |
| வர்த்தகமொன்றை ஆரம்பித்தல் | 101 | 104 | ↓ -3 |
| நிர்மாண அனுமதிப்பத்திரம் | 60 | 60 | → 0 |
| மின்சாரம் பெறுதல் | 100 | 100 | → 0 |
| சொக்கக்களைப் பகிகல் | 124 | 131 | ↓ -7 |
| கடன் பெறுகல் | 86 | 89 | ↓ -3 |
| சிறுபான்மை முதலீட்டாளர்களைப்பாதுகாத்தல் | 50 | 51 | ↓ -1 |
| வரி செலுத்துதல் | 167 | 158 | ↑ 9 |
| எல்லை கடந்து வர்த்தகம் செய்தல் | 85 | 69 | ↑ 16 |
| ஒப்பந்தங்களை நிலைநாட்டுதல் | 165 | 165 | → 0 |
| முறிவடைதலுக்கு தீர்வு காணுதல் | 68 | 72 | ↓ -4 |


**அகாரம்: நடைமுறை வர்க்ககச் சுட்டி**

**வரி – கைக்கெட்டிய பழம்**

இலங்கை மிகவும் எளிதாக பெரும் முன்னேற்றத்தை அடையக்கூடிய பகுதியை கண்டறிவதே அதாவது கைகெட்டிய பழத்தைப் பறித்தலே இரண்டவது படிநிலையாகும்.

கைக்கெட்டிய பழத்தைப் பறித்தலுக்கான காரணிகளை இனங்காணும் ஒரு வழியானது, இலங்கை எவ்விடத்தில் குறைவாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தேடியறிதலாகும். ஓட்டுமொத்த DBI யாக உருவெடுக்கின்ற துணைச் சுட்டிகளில் இலங்கையின் நிலையை காட்சி 11 எடுத்துக்காட்டுகிறது. ‘‘ஒப்பந்தங்களை நிலைநாட்டுதல்’’, ‘‘வரி செலுத்துதல்’’ மற்றும் ‘‘சொத்துக்களைப் பதிவு செய்தல்’’ ஆகியவற்றில் இலங்கை குறிப்பாக மோசமான தரவரிசை நிலையிலேயே உள்ளது என்பதை ராடார் வரைபடம் எடுத்துக்காட்டுகிறநது. (மோசமாக செயலாற்றுதல் ராடார் வரைபடதில் மத்திய புள்ளியிலிருந்த தொலைவில் காட்டப்படபடுகிறது.)

**காட்சி 11: ஒப்பந்தங்களை நிலைநாட்டுதல், வரி செலுத்துதல் மற்றும் “சொத்துக்களைப் பதிவு செய்தல்” ஆகியவற்றில் கவனஞ் செலுத்துதல்**




**ஆதாரம்: நடைமுறை வர்த்தகச் சுட்டி**

இரண்டு காரணிகள் கைகெட்டிய பழங்களாக காணப்படுகின்றன. முதலாவதானது ‘‘வரி செலுத்தலாகும்’’. உலக வங்கியில் DBI வரவு செலவுத் திட்ட மாதிரியானது, ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) , தேசிய கட்டுமான வரி (NBT) மற்றும் பெறுமதிசேர் வரி (VAT) ஆகியவற்றை மாதாந்தம் செலுத்துவதற்குப் பதிலாக மூன்று மாதங்களுக்கொரு முறை செலுத்த அனுமதிப்பதன் மூலம் இலங்கையின் உலகளாவிய DBI தர நிலையானது, (ஏனைய நாடுகள் அதே நிலையில் நிற்குமாயின்) 10 ஸ்தானங்களினால் அதிகரிக்கப்படலாம் என்று மதிப்பிடுகிறது. இந்த சீர்திருத்தத்தில் கணிசமான நன்மைகள் உண்டு. VAT செலுத்தலை மாதாந்தம் மேற்கொள்வதிலிருந்து மூன்று மாதங்களுக்கொரு முறையாக மாற்றுவது VAT கோவைப்படுத்தும் நேரத்தை 35% ஆல் குறைக்குமென PWC மதிப்பிடுகிறது. அத்தோடு, இந்த சீர்திருத்தத்தை அமுல்படுத்துவது மிகவும் சாத்தியமானதாகும்: கடந்த சில ஆண்டுகளில் புருண்டி, ருவாண்டா, பனாமா, ருமேனியா, எல்பீனியா மற்றும் ரீமோர் – லெஸ்டே ஆகிய நாடுகளெல்லாம் மாதாந்த வரிச் செலுத்துகையிலிருந்து மூன்று மாதங்களுக்கொரு முறை வரி செலுத்தும் முறைமைக்கு மாறியுள்ளன.

இரண்டாவது கைக்கெட்டிய பழம் இலங்கை மிகவும் தாழ்வாக தரவரிசைப் படுத்தப்படும் ஒரு துறையல்ல. எனினும், அதில் ஏற்படும் ஒரு சிறிய மாற்றம் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி - இறக்குமதி படிவங்களை தற்போதைய எண்ணிக்கையான ஏழிலிருந்து சிங்கப்பூர் அல்லது கொரியாவின் மூன்று என்ற எண்ணிக்கையாகக் குறைப்பதன் மூலம் இலங்கையின் உலகளாவிய தர நிலை 9 இடங்களால் அதிகரிக்கும் என அந்த மதிப்பீடு கூறுகிறது.


**நலிவான தொடர்புகளை பாதுகாத்தல்**

பல சூழ்நிகைளில் ஒரு நிலையின் கவர்ச்சித் தன்மையானது, நலிவான தொடர்பினைப் போலவே சிறந்தாக அமைகிறது. எனவே, இலங்கையின் மிக மோசமன சாதனை கொண்ட சுட்டியை (நலிவான தொடர்பினை) இனங்கண்டு அதனை மேம்படுத்துவது வர்த்தகச் சூழலை மேம்படுத்துவதற்கு முக்கியமானதாக அமையும்.

எல்லை அளவிற்கு DBI ஒரு தூரத்தை நிர்ணயித்துள்ளது. எல்லா பொருளாதாரங்களுக்குமான சுட்டிகள் ஒவ்வொன்றிலும் அவதானிக்கப்பட்ட மிகச் சிறந்த சாதனையை பிரதிபலிக்கும் ‘‘எல்லை’’ யிலிருந்து ஒவ்வொரு பொருளாதாரமும் எவ்வளவு தொலைவிலுள்ளது என்பதை அது காட்டுகிறது. தர நிலைகளுக்கும் எல்லை அளவிற்கும் இடைப்பட்ட தூரமானது, ஓட்டப் பந்தயமொன்றில் முதலாவதாகவதாக வந்த

ஆளுக்கும் உங்கள் நிலைக்கும் இடையிலான உண்மையான தூரத்தைப் போன்றதாகும். நீங்கள் குறைந்த நிலையைக் கொண்டிருக்கலாம். எனினும், எல்லைக்கு மிக நெருக்கமாக அல்லது மிகவும் பின்னால் இருந்திருக்கலாம்.

**காட்சி lll: ஒப்பந்தங்களை நிலைநாட்டுதல் - மிகவும் நலிவான தொடர்பு**




இந்த அளவுத் திட்டத்தில் ஒப்பந்தங்களை நிலைநாட்டுதல், கடன் பெற்றுக் கொள்ளல் மற்றும் முறிவடைந்த நிலைக்குத் தீர்வு காணல் ஆகிய பகுதிகளில்தான் இலங்கை மிகவும் மோசமான நிலையினைக் கொண்டிருக்கிறது. ஒப்பீட்டு அளவிலும் (காட்சி 1) உண்மையான அளவிலும் (காட்சி 111) மிக நலிவான தொடர்பாக இருப்பது ஒப்பந்தங்களை நிலைநாட்டுவதுதான் என்பதை அவதானிக்கவும். இது மிகவும் முக்கியமானது. ஏனெனில், மிகவும் நலிவான தொடர்பினால் முதலீட்டாளர்கள் தடுமாறக்கூடும்.

ஒப்பந்தங்களை நிலைநாட்டுவதில் இலங்கையின் மோசமான சாதனையானது, முறிவுற்ற தன்மைக்கு தீர்வு காண்பது மற்றும் கடன் பெற்றுக் கொள்வது முதலிய சுட்டியின் ஏனைய துறைகள்மீதும் தாக்கம் ஒன்றைக் கொண்டுள்ளது. சட்ட முறைமைக்கான சீர்திருத்தங்கள் விரைவானதாகவோ எளிதானதாகவோ இல்லாதபோதிலும், இலங்கையின் வர்த்தக சூழ்நிலை மேம்பாடடைய வேண்டுமாயின் அவை மிகவும் முக்கியம் என்பதே இதன் பொருளாகும். உண்மையில் பெறுபேறுகள் சிறந்தனவாக உள்ளன. இலங்கை ஒப்பந்தங்களை நிலை நாட்டுவதற்கு எடுக்கும் காலத்தை 1,318 நாட்களிலிருந்து 553 நாட்களுக்கு (கிழக்காசிய- பசுபிக் சராசரி) குறைக்குமாயின், அதன் உலகளாவிய DBI தர நிலை 15 நிலைகளால் முன்னோக்கி நகரும். இது ஏனைய சுட்டிகள்மீது ஏற்படுத்தும் சிறந்த தாக்கத்தைப் பற்றி பேசவே தேவையில்லை.

## முதல் 10 நாடுகள் வரிசையில் இடம் பிடிப்பதற்கான முதல் மூன்று முன்னுரிமைகள்

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முதல் 10 நாடுகள் வரிசையில் இடம்பிடிப்பதற்கு இலங்கை மேற்கொள்ளக்கூடிய ஆக்கபூர்வமான மூன்று படிநிலைகளை இந்த நுன்மதி வழங்குகின்றது. ஒவ்வொரு படிநிலையிலுமுள்ள ஒரு முன்னெடுப்பை தெரிவு செய்தால்கூட பெரும் முன்னேற்றம் ஏற்படும். அதாவது, சொத்தை பதிவதற்கு உள்ள சிரமங்களிலான "ஓட்டையை அடைத்தல்", வரி செலுத்தும் கால இடைவெளியை மாற்றி "கைக்கெட்டிய பழத்தைப் பறித்தல்" மற்றும் ஒப்பந்தங்களை நிலைநாட்டுவதில் நீதி முறைமையை துரிதமாக இயங்க வைப்பதன் மூலம் "மிகவும் நலிவான தொடர்புகளை" நிர்ணயித்தல் ஆகியவற்றைத் தெரிவு செய்தாலே இந்த இலக்கை அடைந்து விடலாம்.

**வெறிட் றீசேச் ஆசியாவிலுள்ள அரசாங்கங்களுக்கும் தனியார் துறையினருக்கும் மூலோபாய பகுப்பாய்வுச் சேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்குகிறது. உங்கள் கருத்துரைகள் வரவேற்கப்படுகின்றன, மின்அஞ்சல் *insights@veriteresearch.org*.**